Source: *Tamil Murasu,* p2
Date: 19 June 2025

உலகளவில் 8வது இடத்தில் தேசிய பல்கலைக்கழகம்

உலகளவில் கல்வி நிலையங் களுக்கான தரப் பட்டியலில் சிங் கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) மறுபடியும் எட்டா வது இடத்தைப் பிடித்துள்ளது.

தொடர்ந்து பட்டியலின் முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளது என்யுஎஸ்.

என்யுஎசுக்கு சற்றே பின் தங்கியிருக்கிறது மற்றொரு சிங் கப்பூர் பல்கலைக்கழகமான நன்யாங் தொழில்நுட்பப் பல் கலைக்கழகம் (என்டியு). பட்டிய லில் என்டியு மூன்று இடங்கள் முன்னேறி 12வது இடத்தைப் பிடித்தது.

இதற்கு முன்பு ஓராண்டுக்கு முன்னர் என்டியு பட்டியலில் ஒன் பது இடங்கள் முன்னேறியிருந் தது.

பிரிட்டனில் இயங்கும் குவேக்குவரெல்லி சைமண்ட்ஸ் (Quacquarelli Symonds) நிறு வனம் 22வது ஆண்டாக இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. 106 நாடுகளிலிருந்து 1,500 பல் கலைக்கழகங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன.

பட்டியலில் ஆக உயரிய இடத்தைப் பிடித்துள்ள ஆசிய பல்கலைக்கழகமாக என்யுஎஸ் விளங்குகிறது. பட்டியலின் முதல் 10 இடங்களுக்குள் வந்த முதல் ஆசிய பல்கலைக்கழகம் என்ற பெருமையையும் என்யு எஸ் பெற்றுவருகிறது.

அமெரிக்கா, பிரிட்டனைச்



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்).
படம்: என்யுஎஸ் இணையத்தளம்

சேர்ந்த பல்கலைக்கழகங்கள் குவேக்குவரெல்லி சைமண்ட்ஸ் பட்டியலின் முதல் சில இடங் களை வகிக்கின்றன. 14வது ஆண்டாகப் பட்டியலில் முத லிடத்தை வகிக்கிறது அமெரிக் காவின் மேசச்சூசட்ஸ் தொழில் நுட்பக் கழகம் (MIT). இரண்டா வது இடத்தை பிரிட்டனின் 'இம் பீரியல் காலேஜ் ஆஃப் லண்டன்' பிடித்தது.

பிரிட்டனின் ஆக்ஸ்ஃபர்ட், அமெரிக்காவின் ஹார்வர்ட் இரண்டும் நான்கு, ஐந்தாம் இடங்களை வகிக்கின்றன. அவ் விரு பல்கலைக்கழகங்களும் பட்டியலில் ஓரிடம் இறங்கின.

அமெரிக்காவின் ஸ்டான் ஃபர்ட் பல்கலைக்கழகம், பட்டிய லில் மூன்று இடங்கள் முன் னேறி மூன்றாம் இடத்தைப் பிடித்தது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.